www.Padasalai.Net www.CBSEtips.in

No. of Printed Pages : 11

+1 123252 **6452**

பதிவு எண் Register Number | A | U | G | 2 | 0 | 2 | 2 |

# PART - III

# வணிகவியல் / COMMERCE

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

## பகுதி – I / PART – I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[ திருப்புக / Turn over

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



1. பாண்டியர் ஆட்சிக் காலத்தில் பொருட்கள் விற்பனை செய்யும் இடத்திற்கு ________ என்று பெயர்.

(அ) அங்காடி (ஆ) சந்தை (இ) நாளங்காடி (ஈ) அல்லங்காடி

In Pandiyas dynasty, the place where the goods are sold is ________.

(a) Angadi (b) Market (c) Nalangadi (d) Allangadi

2. ஒரு முழுப் பொருள் தயாரிக்கப் பல நிலைகளைக் கடக்கும் உற்பத்தி முறை என்பது :

(அ) பகுப்பாய்வு உற்பத்தித் தொழில்

(ஆ) செயற்கை பொருள் உற்பத்தித் தொழில்

(இ) தொடர்முறை உற்பத்தித் தொழில்

(ஈ) ஒன்று திரட்டும் உற்பத்தித் தொழில்

Production which involves several stages for manufacturing finished products is known as :

(a) Analytical industry

(b) Synthetic industry

(c) Processing industry

(d) Assembling industry

3. தனியாள் வணிகத்தின் குறைபாடு :

(அ) வரையறு பொறுப்பு (ஆ) வரையறாப் பொறுப்பு

(இ) அமைப்பெளிமை (ஈ) விரைவான முடிவு

A major disadvantage of sole proprietorship is :

(a) Limited liability (b) Unlimited liability

(c) Easy formation (d) Quick decision

4. அரசு நிறுவனங்களின் முதன்மையான நோக்கம் :

(அ) லாபம் ஈட்டுதல் (ஆ) வேலை வாய்ப்பை உருவாக்குதல்

(இ) மக்களுக்கு சேவை செய்தல் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

The primary objective of the state enterprise is to :

(a) Earn profit (b) Provide employment

(c) Serve the people (d) All the above

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



5. RTGS மூலம் குறைந்தபட்சம் எவ்வளவு பணம் பரிமாற்றம் செய்ய முடியும் ?

(அ) எவ்வளவு தொகை வேண்டுமானாலும்

(ஆ) ₹ 50,000

(இ) ₹ 2 லட்சம்

(ஈ) ₹ 5 லட்சம்

Minimum how much amount can be transferred through RTGS ?

(a) Any amount

(b) ₹ 50,000

(c) ₹ 2 lakhs

(d) ₹ 5 lakhs

6. பின்வருவனவற்றுள் எது கடல்சார் காப்பீடு வகையினைச் சார்ந்தது ?

(அ) பணம் திருப்பத் திட்டாவணம் (ஆ) பொருள்சார் காப்பீடு

(இ) கப்பல்சார் காப்பீடு (ஈ) (ஆ) மற்றும் (இ)

Which one of the following is a type of Marine Insurance ?

(a) Money back policy (b) Cargo insurance

(c) Hull insurance (d) Both (b) and (c)

7. மின்னணு வலைதளத்தின் மூலம் பொருட்களை வாங்குதல் மற்றும் விற்றல் ________ எனப்படுகிறது.

(அ) மின்னணு வர்த்தகம்

(ஆ) மின்னணு வங்கியியல்

(இ) மின்னணு சில்லறை வியாபாரம்

(ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

__________ is the buying and selling of goods and services through electronic network.

(a) E-commerce

(b) E-banking

(c) E-retailing

(d) None of the above



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



8. அன்பு மற்றும் பாசம் அல்லது சமூக சேவை உள்நோக்கம் ஆகியவற்றால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் :

(அ) பொருளாதாரச் செயல்பாடுகள்

(ஆ) பண நடவடிக்கைகள்

(இ) பொருளாதாரச் சார்பற்ற செயல்பாடுகள்

(ஈ) நிதி நடவடிக்கைகள்

Activities undertaken out of love and affection or with social service motive are termed as :

(a) Economic activities

(b) Monetary activities

(c) Non-economic activities

(d) Financial activities

9. கடன் பத்திரத்தாரர்கள் ஒரு நிலையான ________ விகிதம் பெறத் தகுதியுடையவர்கள்.

(அ) பங்காதாயம் (ஆ) இலாபம் (இ) வட்டி (ஈ) விகிதம்

Debenture holders are entitled to a fixed rate of :

(a) Dividend (b) Profits (c) Interest (d) Ratios

10. முத்ரா வங்கி எவ்வகை நிறுவனங்களுக்குக் கடன் வழங்குகிறது ?

(அ) குறு நிறுவனங்கள் (ஆ) சிறு நிறுவனங்கள்

(இ) நடுத்தர நிறுவனங்கள் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

Which of the following enterprise gets financial assistance from MUDRA Bank ?

(a) Micro enterprise (b) Small enterprise

(c) Medium enterprise (d) All of the above

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**11.** உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது :

(அ) வியாபாரம் (ஆ) தொழிற்சாலை (இ) வணிகம் (ஈ) வர்த்தகம்

_________ acts as a connective link between the producer and the consumer.

(a) Trade (b) Industry (c) Commerce (d) Business

**12.** உற்பத்தியாளரிடம் பொருட்களை வாங்கிச் சில்லறை வியாபாரிகளுக்கு விற்பனை செய்பவர் _________.

(அ) உற்பத்தியாளர் (ஆ) மொத்த வியாபாரி

(இ) சில்லறை வியாபாரி (ஈ) நுகர்வோர்

_________ buy the goods from the producer and sell it to the retailers.

(a) Manufacturer (b) Wholesaler

(c) Retailer (d) Consumer

**13.** _________ சட்டத்தின்படி ஆண் வாரிசுகள் மட்டுமே வம்சாவழி சொத்தில் உரிமையுள்ளவர்கள்.

(அ) இந்து சட்டம் (ஆ) மிடாக்சரா சட்டம்

(இ) தயாபாகா சட்டம் (ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

'Only the male members in the family get the right of inheritance by birth' as per _________.

(a) Hindu law (b) Mitakshara law

(c) Dayabhaga law (d) None of these

[ திருப்புக / Turn over

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



14. நாடுகளுக்கிடையே சரக்கு, சேவை, அறிவுசார் உரிமைகள், தொழில் நுட்பம் மற்றும் மனித உழைப்பு ஆகியவை இடம் பெயருவது :

(அ) பன்னாட்டு வணிகம் (ஆ) பன்னாட்டு வியாபாரம்

(இ) மறு ஏற்றுமதி வியாபாரம் (ஈ) உள்நாட்டு வியாபாரம்

Movement of goods, services, intellectual property, technology and human assets among the countries is :

(a) International trade (b) International business

(c) Entrepot trade (d) Internal trade

15. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை :

(அ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு (ஆ) ஏற்றுக் கொள்ளப்பட்ட முனைவு

(இ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி (ஈ) ஒப்பந்தம்

An agreement enforceable by law is a :

(a) Enforceable acceptance (b) Accepted offer

(c) Approved promise (d) Contract

16. இரு தரப்பு ஒப்பந்தம் மூலம் விடுவிக்கப்படுவது :

(அ) பரிமாற்றம் (ஆ) ரத்து செய்தல்

(இ) திருத்தம் (ஈ) மேற்கூறிய அனைத்தும்

Discharge by mutual agreement may involve :

(a) Novation (b) Rescission

(c) Alteration (d) All of the above

17. வருமான வரி என்பது :

(அ) வியாபார வரி (ஆ) நேரடி வரி

(இ) மறைமுக வரி (ஈ) சேவை வரி

Income tax is a :

(a) a business tax (b) a direct tax

(c) an indirect tax (d) service tax

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**18.** IGST என்பது :

(அ) ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி

(ஆ) இந்திய சரக்கு மற்றும் சேவை வரி

(இ) ஆரம்ப சரக்கு மற்றும் சேவை வரி

(ஈ) பன்னாட்டு சரக்கு மற்றும் சேவை வரி

What is IGST ?

(a) Inter-State Goods and Service Tax

(b) Indian Goods and Service Tax

(c) Initial Goods and Service Tax

(d) International Goods and Service Tax

**19.** கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்ட மன்றங்கள் இயற்றிய சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?

(அ) பட்டய நிறுமம் (ஆ) அயல்நாட்டு நிறுமம்

(இ) அரசு நிறுமம் (ஈ) சட்ட முறை நிறுமம்

Which of the following is created by a special act of parliament or in state assemblies ?

(a) Chartered company (b) Foreign company

(c) Government company (d) Statutory company

**20.** கூட்டுறவு அமைப்பில் உறுப்பினர்கள் :

(அ) யார் வேண்டுமானாலும் உறுப்பினர் ஆக முடியாது

(ஆ) தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்

(இ) யார் வேண்டுமானாலும் இருக்கலாம்

(ஈ) மேற்கண்டவற்றில் எதுவுமில்லை

Membership in a co-operative organization is :

(a) Not open to all

(b) Selective

(c) Open to all

(d) None of them



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **30** -க்கு கட்டாயமாக விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** வணிகத்தை வரையறுக்கவும்.

Define Commerce.

**22.** கர்த்தா என்பவர் யார் ?

Who is called Karta ?

**23.** வருமான வரி என்றால் என்ன ?

What is Income tax ?

**24.** கடன் அட்டை (Credit Card) - சிறு குறிப்பு வரைக.

Write a short note on Credit Card.

**25.** ஆயுள் காப்பீட்டுத் திட்டாவண வகைகளை குறிப்பிடுக.

State the types of life insurance policies.

**26.** தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன ?

What is meant by BPO ?

**27.** சிறப்பு பண்டகச் சாலைகள் என்றால் என்ன ?

What are speciality stores ?

**28.** இறக்குமதி வியாபாரம் என்றால் என்ன ?

What is meant by import trade ?

**29.** ஒப்பந்தம் என்றால் என்ன ?

What is meant by contract ?

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



**30.** திரு. இராம் அவர்கள் பல்வேறு இடங்களில் கடைகளை அமைத்து ஒரே மாதிரியான தரமான பொருட்களை விற்பனை செய்து வருகிறார். இவை எவ்வகையான சில்லறை வியாபார கடைகள் ?

Mr. Ram owns retail shop in different localities, deals in identical and branded products. Identify the type of Retail shops.

## பகுதி - III / PART - III

குறிப்பு : **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **40** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** தொழில் - சிறு குறிப்பு வரைக.

Write a short note on Business.

**32.** கூட்டாண்மை ஒப்பாவணம் என்றால் என்ன ?

What is the meaning of partnership deed ?

**33.** துறைவாரி நிறுவனம் என்றால் என்ன ?

What is meant by departmental undertaking ?

**34.** இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார் ?

Who are the persons involved in RBI administration ?

**35.** கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் வகைகளைக் குறிப்பிடுக.

Classify the sources of Business finance on the basis of period.

**36.** உள்நாட்டு வியாபாரத்தின் வகைகள் யாவை ? விளக்குக.

Explain the types of internal trade.

[ திருப்புக / Turn over

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



37. உடன்படிக்கை என்றால் என்ன ?

What do you mean by agreement ?

38. நபர் என்ற சொல்லில் யாரெல்லாம் அடங்குவர் ?

Who are all included in the term 'person' ?

39. குளிர் சாதன பண்டகக் காப்பு என்றால் என்ன ?

What is cold storage warehouse ?

40. இந்தியா, இங்கிலாந்திற்கு தேயிலையை விற்பனை செய்கிறது. இது எவ்வகையான பன்னாட்டு வியாபாரம் ? விவரிக்கவும்.

Selling of tea from India to England.

Identify the type of trade and explain it.

## பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

41. (அ) பண்டமாற்று முறைக்கான நிபந்தனைகளாகக் கூறப்பட்டுள்ளன யாவை ?

**அல்லது**

(ஆ) முத்ரா வங்கி - விளக்குக. சுய உதவிக் குழுவின் நோக்கங்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

(a) State the constraints in barter system.

**OR**

(b) Explain MUDRA Bank and state any three objectives of self help group.

42. (அ) தனியாள் வணிகத்தின் குறைபாடுகளை விவரிக்கவும்.

**அல்லது**

(ஆ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

(a) What are the disadvantages of sole trading business ?

**OR**

(b) What are the differences between contract and agreement ?

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



43. (அ) கூட்டுறவின் கொள்கைகள் யாவை ?

அல்லது

(ஆ) மொத்த வியாபாரியின் பணிகள் யாவை ?

(a) What are the principles of co-operatives ?

OR

(b) What are the functions of wholesalers ?

44. (அ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை ?

அல்லது

(ஆ) வணிக வங்கிகளால் நிகழ்த்தப்படும் பல்வேறு வகையான முதன்மை செயல்பாடுகளை விவரிக்கவும்.

(a) What are the contents of Memorandum of Association ?

OR

(b) Discuss the various primary functions performed by the Commercial Bank.

45. (அ) பண்டகக் காப்பின் நன்மைகளை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) உள்நாட்டு வணிகத்திற்கும் பன்னாட்டு வணிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

(a) Explain the advantages of warehousing.

OR

(b) Distinguish between internal and international trade.

46. (அ) சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) காப்பீட்டின் வகைகளை விவரிக்கவும்.

(a) Explain the different types of retailers.

OR

(b) Explain the various types of insurance.

47. (அ) சரக்கு மற்றும் சேவை வரியின் வகைகளை விளக்குக.

அல்லது

(ஆ) தொழிலின் சிறப்பியல்புகள் யாவை ?

(a) Discuss the different kinds of GST.

OR

(b) Explain the characteristics of business.

- o O o -

Padasalai.Net

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com